2. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கைகள் அளித்தல்.* (குறுக்கீடு) *இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன.* Please sit down. (குறுக்கீடு) *குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.* (குறுக்கீடு) Please sit down, Doctor. *உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. அதனால் நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் குலதெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னைப் பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவராக நியமித்த இதய தெய்வத்திற்குக் கோடானுகோடி நன்றியினைத் தங்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான 1 முதல் 3 வரையிலான 3 அறிக்கைகளைப் பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர், நீங்கள் அவையின் நடவடிக்கைகளுக்கு தயவுசெய்து குந்தகம் விளைவிக்காதீர்கள்.* Please sit down. No, I am not allowing.

முற்பகல் 10—45

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) *நீங்கள்*